# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2459/15 - 2025 ඔක්තෝබර් මස 22 වැනි බදාදා - 2025.10.22

2459/15 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் ருவன்வல்லை பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிகமபல் கோரலே சிறு பிரிவில், இலக்கம் 101 வஹரக்க கிராம அலுவலர் பிரிவில், வஹரக்க கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட KE/RWN/2022/313 மற்றும் 2022.11.03 ஆந் திகதிக்குரிய சுவட்டு வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் மற்றும் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டுகளுக்கான எல்லைகள்:

01. **துண்டு ‘A’ – மஹகந்த குடியேற்றம் - விஸ்தீரணம்: 0.0432 ஹெக்டயார்**
வடக்கு : ஆ.வ.ப. கே 3791 இல் காணித் துண்டு இல. 19; கிழக்கு: டீ.ஏ. ஷெல்டன் சரத்சந்திர உரிமை கோருகின்ற மஹகந்த குடியேற்றம்; தெற்கு: டீ.ஏ. ஷெல்டன் சரத்சந்திர மற்றும் ஏ.ஏ. பந்துல ஜினசோம உரிமை கோருகின்ற மஹகந்த குடியேற்றம் மற்றும் ஆ.வ.ப. கே 3791 இல் காணித் துண்டு இல. 23 ; மேற்கு : ஆ.வ.ப. கே 3791 இல் காணித் துண்டு இல. 19.

02. **துண்டு ‘B’ – மஹகந்த குடியேற்றம் - விஸ்தீரணம்: 0.0297 ஹெக்டயார்**
வடக்கு : ஆ.வ.ப. கே 3791 இல் காணித் துண்டு இல. 42 மற்றும் 30; கிழக்கு: ஆ.வ.ப. கே 3791 இல் காணித் துண்டு இல. 30; தெற்கு: எச்.வீ. சோமாவத்தீ உரிமை கோருகின்ற மஹகந்த குடியேற்றம்; மேற்கு : எச்.வீ. சோமாவத்தீ மற்றும் டப்.ஏ. சந்திரசேன உரிமை கோருகின்ற மஹகந்த குடியேற்றம்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது கோவை இல. : 4-3/2/2021/IR/382.
கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 04.

EOG 10 - 0207